கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பொன் விழாவினை சிறப்பிக்கும் வகையில், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள 333 ஊராட்சிகளுக்கு 33 விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய 541 தொகுப்புகளை உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி வழங்கினார். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் .சரயு , மாவட்ட செயலாளர்கள் தே.மதியழகன் எம் எல் ஏ, ஒய்.பிரகாஷ் எம்எல்ஏ மற்றும் பலர் உள்ளனர்.

நீலகிரி மாவட்டத்தில்

தூய்மைக் காவலர்களை தொழில்முனைவோர்களாக மாற்றும் திட்டம்!

அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் துவக்கி வைத்தார்!

நீலகிரி,டிச.9- முதலமைச்சர் அவர்கள், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை சார்பில் நடைபெற்ற அரசு விழாவில், தூய்மை காவலர்களை தொழில்முனைவோர்களாக மாற்றும் உன்னத திட்டத்தின்கீழ், 100 நவீன கழிவுநீர் அகற்றும் வாகனங்களை வழங்கியதை தொடர்ந்து, நீலகிரி மாவட்டத்தில் நடைபெற்ற விழாவில், அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு முன்னிலையில் 549 பயனாளிகளுக்கு ரூ.4.88 கோடி மதிப்பீட்டில் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி, 455 தூய்மை காவலர்களுக்கு சால்வை அணிவித்து இனிப்புகளை வழங்கி கௌரவித்தார்.

நீலகிரி மாவட்டம், உதகை ஒக்கலிகர சங்கம் திருமண மண்டபத்தில் 06.12.2024 அன்று நடைபெற்ற விழாவில், அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு முன்னிலையில் 549 பயனாளிகளுக்கு ரூ.4.88 கோடி மதிப்பீட்டில் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி, 455 தூய்மை காவலர்களுக்கு சால்வை அணிவித்து இனிப்புகளை வழங்கி கௌரவித்தார்.

இவ்விழாவில், அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் தெரிவித்ததாவது :-

முதலமைச்சர் அவர்கள், டாக்டர் அம்பேத்கர் அவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு, சென்னையில் நடைபெற்ற அரசு விழாவில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி, தூய்மை காவலர்களை கௌரவப்படுத்தினார்கள். முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலிற்கிணங்க, ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைச்சர் பெருமக்கள் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆகியோர்கள் மூலம் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கி, தூய்மை காவலர்களை கௌரவப்படுத்துகிறார்கள்.

முதலமைச்சர் அவர்கள் சமத்துவம் மற்றும் சகோதரத்தை வலியுறுத்தும் வகையிலும், ஏழை, எளிய உள்ளிட்ட அனைத்து தரப்பு மக்களும் வாழ்வாதாரத்தில் முன்னேற பல்வேறு வளர்ச்சித்திட்டப்பணிகளையும், நலத்திட்ட உதவிகளையும் தொடர்ந்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். அதன்படி, தமழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வரும் சிறப்பான திட்டங்களின்கீழ் நீலகிரி மாவட்டத்தில் முதலமைச்சர் காலை உணவுத்திட்டத்தின்கீழ் 10,700 மாணாக்கர்களும், புதுமைபெண் திட்டத்தின்கீழ் 1,430 மாணவியர்களும், தமிழ்புதல்வன் திட்டத்தின்கீழ் 1,562 மாணவர்களும், நான் முதல்வன் திட்டத்தின்கீழ் 25,647 மாணாக்கர்களும், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின்கீழ் 1.127 இலட்சம் பயனாளிகளும், விடியல் பயணத்திட்டத்தின்கீழ் 88.27 இலட்சம் பயனாளிகளும், கலைஞர் கனவு இல்லத்திட்;டத்தின்கீழ் 1,334 பயனாளிகளுக்கு வீடுகளும், விவசாயிகளுக்கு புதிய மின் இணைப்பு வழங்கும் திட்டத்தின்கீழ் 738 பயனாளிகளுக்கும், இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48 திட்டத்தின்கீழ் 975 பயனாளிகளுக்கும், கலைஞரின் வருமுன் காப்போம் திட்டத்தின்கீழ் 30,653 பயனாளிகளும், மக்களுடன் முதல்வர் திட்டத்தின்கீழ் 4,633 பயனாளிகளும் பயன்பெற்றுள்ளனர்.

மேலும், நமது முதலமைச்சர் அவர்கள், பழங்குடியினர்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றவும், அவர்கள் கல்வியறிவு பெறவும் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். தமிழ்நாட்டில் பல்வேறு பழங்குடியின மக்கள் வசித்து வந்தாலும், நமது நீலகிரி மாவட்டத்தில், பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த பழங்குடியின மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்கு கல்வி வழங்குவதற்காக உண்டு, உறைவிடப்பள்ளிகள் நடத்தப்பட்டு வருகிறது. அதில் நமது மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலிருந்து பழங்குடியினர்கள் கல்வி பயின்று வருகிறார்கள். கல்வி பயிலும் பழங்குடியினர்கள் எண்ணிக்கையினை அதிகரிக்க பள்ளிக்கல்வித்துறை சார்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது. அதனை பழங்குடியின மாணவ, மாணவியர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பள்ளிப்படிப்பு மட்டுமல்ல உயர்கல்விக்கும் அனுப்பி தங்கள் பிள்ளைகளை நன்றாக படிக்க பழங்குடியின பெற்றோர்கள் முன்வர வேண்டும்.

அதோடு மட்டுமல்லாமல் பழங்குடியினர்களுக்கு மேலும் பல்வேறு திட்டங்கள் அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நீலகிரி மாவட்டத்தில் வன உரிமைச் சட்டத்தின்கீழ் 170 நபர்களுக்கு தனிநபர் உரிமையும், 80 நபர்களுக்கு சமுதாய உரிமையும், வீடு இல்லாதவர்களுக்கு வீடு வழங்கும் திட்டத்தின்கீழ் 463 பயனாளிகளுக்கு ரூ.18.63 இலட்சம் மதிப்பீட்டில் வீடுகளும், பழங்குடியின பள்ளிகளில் வீட்டு தோட்டம் அமைக்க தலா ரூ.10,000ஃ வீதம் 15 பள்ளிகளுக்கு ரூ.1.50 இலட்சமும்,

பழங்குடியின மேம்பாட்டு திட்டத்தின்கீழ் டீ வண்டிகள் ரூ.16 இலட்சம் செலவிலும், உன்னிக்குச்சி கைகளை கொண்டு மரச்சாமான்கள் செய்யும் தொழிலை ஊக்குவிக்க ரூ.60.90 இலட்சமும், அத்திட்டத்தை செயல்படுத்த வாகனம் வாங்க ரூ.10.85 இலட்சமும், பூதநத்தம் கிராம பழங்குடியினர் விவசாயத்தை மேம்படுத்த பாசன வசதிக்காக ரூ.68 இலட்சமும், தோடர் எருமைகளை கொண்டு பால் பொருட்கள் உற்பத்தி செய்ய இயந்திரம் வாங்க ரூ.50 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது. எனவே, முதலமைச்சர் பழங்குடியின மக்களுக்காக செயல்படுத்தப்படும் நலத்திட்டங்களை பயன்படுத்தி பயன்பெற வேண்டும்.

இன்று நடைபெற்ற இவ்விழாவில், 549 பயனாளிகளுக்கு ரூ.4.88 கோடி மதிப்பீட்டில் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு, 455 தூய்மை காவலர்கள் கௌரவிக்கப்பட்டனர் என அரசு தலைமை கொறடா தெரிவித்தார்.

இவ்விழாவில் உதகை வருவாய் கோட்டாட்சியர் சதீஷ், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) சதீஷ்குமார், தோட்டக்கலைத்துறை இணை இயக்குநர் திருமதி. ஷிபிலா மேரி, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின நல அலுவலர் (பொ) சக்திவேல், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) சரவணகுமார், உதவி செயற்பொறியாளர் (பேரூராட்சிகள்) ராஜா, நகராட்சி ஆணையாளர்கள் ஸ்டேன்லி பாபு (உதகை), இளம்பரிதி (குன்னூர்), முனியப்பன்; (நெல்லியாளம்), செல்வி ஸ்வேதாஸ்ரீ (கூடலூர்), நகராட்சித்தலைவர்கள் திருமதி.வாணீஸ்வரி (உதகை), திருமதி.பரிமளா (கூடலூர்), திருமதி.சுசிலா (குன்னூர்), ஊராட்சி ஒன்றியத்தலைவர்கள் மாயன் (எ) மாதன் (உதகை), திருமதி.சுனிதா நேரு (குன்னூர்), திருமதி. கீர்த்தனா (கூடலூர்), உதகை நகராட்சித்துணைத்தலைவர் ரவிக்குமார், திட்டக்குழு உறுப்பினர்கள் ஜார்ஜ், திருமதி.விசாலாட்சி, திரு.ராமசாமி, உதகை வட்டாட்சியர் சங்கர்கணேஷ் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

கடலூர் கிழக்கு மாவட்ட கழகம் சார்பில், பெஞ்சால் புயலால் பாதிக்கப்பட்ட 50 ஆயிரம் மக்களுக்கு உணவுப் பொருட்கள், மளிகைப் பொருட்கள், அரிசி, காய்கறிகள், போர்வைகள், வேட்டி சேலைகள் உள்ளிட்ட நிவாரண உதவிகளை மாவட்ட கழக செயலாளரும், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சருமான எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வழங்கி துவக்கி வைத்தார். மாவட்ட கழக பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன் தொடர்ந்து பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு சென்று, மக்களை சந்தித்து ஆறுதல் கூறி நிவாரண உதவிகளை வழங்கி வருகிறார். மாவட்ட கழக நிர்வாகிகள் ,மாநகர ஒன்றிய, நகர ,பகுதி, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் நிவாரண பணிகள் மற்றும் மீட்பு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

முனைவர், முது முனைவர் ஆகிய பட்ட மேற்படிப்பு ஆய்வுக் கட்டுரை

தமிழ் மொழியிலேயே சமர்பிக்க நடவடிக்கை!

உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தகவல்!

தஞ்சாவூர், டிச. 9 - தஞ்சாவூர் மாவட்டம், திருப்பனந்தாள் ஒன்றிய பகுதிகளில் பல்வேறு அரசு திட்டங்களை உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் துவக்கி வைத்தார்.

தஞ்சாவூர் மாவட்டம், திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றியத்தில் சிதம்பரநாதபுரம் ஊராட்சியில் சமுதாயகூடம் திறப்பு, காவனூர் ஊராட்சியில் பள்ளிக் கட்டிடம் திறப்பு விழா, சரபோஜிராஜபுரம் ஊராட்சியில் பேருந்து தடம் நீட்டிப்பு துவக்கம், ஊராட்சி மன்ற அலுவலகம் திறப்பு விழா, மரந்துரை ஊராட்சியில்ஊராட்சி மன்ற அலுவலகம் திறப்பு விழா, நெய்க்குப்பை ஊராட்சியல் நேரடி கொள்முதல் நிலையம் திறப்பு, திரு மங்கைச்சேரி ஊராட்சியில் ஊராட்சி மன்ற அலுவலகம் திறப்பு, செருக்குடி ஊராட்சியில் ஊராட்சி மன்ற அலுவலகம் திறப்பு, ஆரூலூர் ஊராட்சியில் சமுதாயக்கூட்டம் திறப்பு விழா, திருலோகி ஊராட்சியில் பொது விநியோக அங்காடி திறப்பு உள்ளிட்ட பல்வேறு நிகழச்சியில் கலந்துகொண்டு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :

கல்லூரிகளுக்கு தேவையான அனைத்து அடிப்படை கட்டமைப்புகளும் மேம்படுத்தப்பட்டு வருகிறது. உயர்கல்விக்கு மாவட்ட அளவில் நிதி ஒதுக்கப்படவில்லை என்ற செய்தி பரவலான கருத்தாக இருக்கலாமே தவிர, அந்தந்த பள்ளிகள், கல்லூரிகள் உள்ளிட்ட அரசு நிறுவனங்கள் அனைத்திற்கும் உரிய தொகை உரிய தேவைக்கேற்ப வழங்கப்படுகிறது. கல்லூரி முதல்வர் மற்றும் மண்டல இணை இயக்குனர்கள் இருக்கிறார்கள் அவர்களின் தேவைக்கேற்ப வழங்கப்பட்டு வருகிறது. உயர்கல்விக்கு தேவையான நிதிகள் ஒதுக்கி தரப்படுகிறது. நீண்ட நாட்களாக முதல்வர் பணியிடம் காலியாக இருந்த கும்பகோணம் அரசினர் மகளிர் கலைக்கல்லூரியில் முதல்வர் பணியிடத்தை நிரப்பியது என அடுக்கடுக்காக பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வரப்படுகிறது. கும்பகோணம் அரசினர் ஆடவர் கலைக்கல்லூரியில் மாணவர்கள் மற்றும் பேராசிரியர்களின் கோரிக்கையை ஏற்று ரூ.10 லட்சம் மதிப்பீட்டில் கழிவறை வசதிகளை மேம்படுத்த பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் கூடுதலாக கல்லூரிகளை திறப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. முதுகலை பட்டம், இளம் முனைவர், முனைவர் பட்டம் போன்றவை பல்கலைக்கழகங்களில் பெற ஆய்வு கட்டுரைகளை தமிழ் துறையை தவிர ஆங்கிலத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என இருந்தாலும், மாணவர்களின் விருப்பத்திற்கு ஏற்ப ஆய்வுகளை தமிழில் மேற்கொள்ளலாம் என கேட்டால் பல்கலைக்கழக நிர்வாகம், கல்லூரி நிர்வாகம் அனுமதி வழங்குகிறது. அதன் அடிப்படையில் தமிழுக்கு முன்னுரிமை தருபவரே நமது முதல்வர், ஆகவே மாணவர்களின் கோரிக்கை ஆங்கில ஆய்வு இல்லாமல் தமிழில் என்று கேட்டால், அதற்கான அனுமதியையும் உயர்கல்வித் துறை மூலமாக பல்கலைக்கழகம், கல்லூரிகள் வழங்குவதற்காக நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என அமைச்சர் கோவி.செழியன் தெரிவித்தார்.

தமிழ்நாடு முதல மைச்சரின் மு.க.ஸ்டாலின் உத்தரவின்படி, போக்குவரத்துத் துறை அமைச்சர் சிவசங்கர் வழிக்காட்டுதலின்படியும், உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் சட்டமன்ற தொகுதி, திருப்பனந்தாள் ஒன்றியம், சரபோஜராஜபுரம் ஊராட்சி, வேட்டமங்கலம் கிராமத்தில் உள்ள பள்ளி மாணவ, மாணவியர்கள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கைக்கு ஏற்ப கும்பகோணத்திலிருந்து கோணுலாம்பள்ளம் இயக்கப்படும் நகர பேருந்தினை காமாட்சிபுரம் வழியாக வேட்டமங்கலம் வரை நீட்டிப்பு செய்த புதிய வழித்தட பேருந்தினை அமைச்சர் கோவி.செழியன் துவக்கி வைத்து பேசியதாவது,

வேட்டமங்கலம் கிராமத்திற்கு வெள்ளைக்காரன் ஆட்சி காலத்திலிருந்து பேருந்து வசதி இல்லை என்று கோரிக்கை வைத்ததையடுத்து தமிழ்நாடு முதலமைச்சர் ஆணைக்கிணங்க, போக்குவரத்துத் துறை அமைச்சர் துரிதமாக நடவடிக்கை எடுத்து இன்று இப்பேருந்து சேவை தொடங்கப்பட்டுள்ளது. அருகில் உள்ள கோணுலாம்பள்ளம் கிராமம் வரை வந்து செல்கின்ற தடம் எண்.A34A பேருந்தினை பள்ளி செல்லும் மாணவ, மாணவியர்களின் நலன் கருதி காலை, மாலை என மூன்று முறை வந்து செல்லக்கூடிய அளவிற்கு தடநீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது. கிராமப்புற மக்கள் கேட்கின்ற அனைத்து உதவிகளையும் உடனுக்குடன் நிறைவேற்ற தமிழ்நாடு முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார். திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட அனைத்து கிராமத்திற்கும் தேவைப்படுகின்ற அடிப்படை வசதிகள் தொடர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகிறது. பேருந்து சேவையினை பாராட்டி இன்று வேட்டமங்கலம் கிராம மக்கள் அனைவரும் திரண்டு அளித்த வரவேற்பை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்கிறோம். எந்த கோரிக்கையாக இருந்தாலும் உடனுக்குடன் நிறைவேற்றவும் அலுவலர்கள் ஒருங்கிணைந்து செயல்படுவது பாராட்டுக்குரியது. அரசின் திட்டங்களை பெறுகின்ற பொது மக்கள் அனைவரும் தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான அரசிற்கு நல்ஆதரவு வழங்கவேண்டும் என கேட்டுக் கொள்கிறேன் என தெரிவித்தார்.

மேற்கண்ட நிகழ்ச்சிகளில் தலைமைச் செயற்குழு உறுப்பினரும், முன்னாள் எம்.பியுமான செ. இராமலிங்கம், திருப்ப னந்தாள் ஒன்றிய குழு தலைவர் தேவி இரவிச்சந்திரன், துணைத்தலைவர் கோ.க. அண்ணாதுரை, ஒன்றிய செயலாளர்கள் மிசா என். மனோகரன், இர.உத யச்சந்திரன், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள் பாலகுரு, இளவரசி, கும்பகோணம் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழக நிர்வாக இயக்குநர் பொன்முடி, பொது மேலாளர் கும்பகோணம் மண்டலம் ரீதரன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் பாலகணேஷ், கோவி. ஆசைத்தம்பி, சுவாமி நாதன், கிளை மேலாளர் சுரேஷ், ஊராட்சி மன்ற தலைவர் இராமசந்திரன், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், தொழிற்சங்க பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நாமக்கல் மாவட்டம், மோகனூர் வட்டம், இராசிபாளையம் ஊராட்சி, மொட்டகாளிப்பட்டியில் 7 பசுக்களை இழந்த குடும்பத்திற்கு நாமக்கல் மாவட்ட ஆட்சியர் மரு. ச.உமா விருப்பு உரிமை தொகையிலிருந்து வழங்கிய ரூ.2,00,000 நிதி உதவிக்கான காசோலையை நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் நேரில் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம், மோகனூர் வட்டாட்சியர் மணிகண்டன், ஒன்றிய செயலாளர் பெ.நவலடி மற்றும் கழக நிர்வாகிகள் விவசாய சங்கத்தினர் கலந்து கொண்டனர்.

திருச்சிராப்பள்ளி அமராவதி தொமுச சார்பாக தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு தொமுச பேரவை பொதுச் செயலாளர் மு. சண்முகம் எம். பி தொமுச தலைவர் கி. நடராசன் ஆகியோர் ஆலோசனைப்படி பேரவை செயலாளர் R. எத்திராஜ், ஜோசப், நெல்சன், குணசேகரன், ரவீந்திரன் மற்றும் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை தொமுச மாநில பொதுச் செயலாளர் சு. பத்மநாபன் ஆலோசனைப்படி தலைமை அலுவலகத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் அமராவதி தொமுச தலைவர் ஜி .பொன்ராஜ், பொதுச் செயலாளர் பி சதீஷ்குமார், பொருளாளர் பி. ஜெயராமன் மற்றும் சங்க நிர்வாகிகள் செந்தில்வேல், சுரேஷ்குமார், சரவணகுமார், மருது புகழ் விக்னேஷ், பார்த்திபன், மலர்க்கொடி, ஜனார்த்தனன், பிரபாகரன், பார்த்திபன், நோபல் கலந்து கொண்டு சிறப்பித்தனர் அமராவதி தொமுச பொதுச் செயலாளர் பி .சதீஷ்குமார் நன்றி கூறினார்

எம்.அப்துல்மாலிக் - அமிர்த.விஜயகுமார் பங்கேற்பு! ஹர்ஷத் ஏற்பாட்டில்!

வடகரையில் மாணவ - மாணவிகளுக்கு தலா ரூ.10,000 நிதி!

மாவட்ட செயலாளர் நிவேதா எம். முருகன் எம்.எல்.ஏ. வழங்கினார்!

மயிலாடுதுறை டிச.9- மயிலாடுதுறை மாவட்டம் வடகரையில் கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் முன்னிட்டு பொதுக்குழு உறுப்பினர் ஹர்ஷத் ஏற்பாட்டில் மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் ஒன்றியம் அரங்கக்குடி, வடகரை ஆகிய அரசு உயர்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பு பொது தேர்வில் முதல் மதிப்பெண் பெற்ற மாணவ மாணவிகளுக்கு காசோலை வழங்கல், பள்ளி மாணவ, மாணவிகளுக் கல்வி உபகரணம் வழங்கும் மற்றும் பள்ளி ஆசிரியர்களுக்கு பாராட்டு விழா நடை பெற்றது. விழாவிற்க்கு ஒன்றிய கழக செயலாளர்கள் எம். அப்துல் மாலிக், அமிர்த.விஜயகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பொதுகுழு உறுப்பினர் ஹர்ஷத் வரவேற்றார். விழாவிற்கு மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம். முருகன் கலந்து கொண்டு தலைமை தாங்கி பள்ளிகளில் 10ம் வகுப்பு பொது தேர்வில் முதலிடம் பெற்ற 2 மாணவ, மாணவிகளுக்கு தலா ரூ 10,000 வீதம் காசோலைகளையும் பள்ளி மாணவ மாணவிகளுக்கு கல்வி உப கரணங்களையும் வழங்கியும் பள்ளி 100% தேர்ச்சிஎட்டியமைக்கு ஆசிரியர்களுக்கு பாராட்டு தெரிவித்து சால்வை அறிவித்து பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட சிறுபான்மை நலப்பிரிவு அமைப்பாளர் எம். சம்சுதீன், மாவட்ட விவசாய தொழிலா ளர்களின் துணை அமைப்பாளர் செந்தில், ஒன்றிய குழு உறுப்பினர் ஷேக் அலாவுதீன், கிளை செயலாளர் ராஜா.பள்ளியின்தலைமை ஆசிரியர் கீதா, மற்றும் ராம்தாஸ், இளையானூர் ஊராட்சி அரங்கக்குடி வடகரை பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

நெல்லை மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவு மற்றும் டி.பி. சோலார்,காவேரி மருத்துவமனைடன் இணைந்து நடைபெற தூய்மை பணியாளர் களுக்கான சிறப்பு மருத்துவ முகாமில் பாளை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல்வகாப் பங்கேற்று மேயர் ராமகிருஷ்ணன், துணை மேயர் ராஜு ஆகியோர் முன்னிலையில் துவக்கி வைத்தார். நிகழ்வில் மண்டல தலைவர்கள் மகேஸ்வரி (நெல்லை)கதிஜா இக்லாம் பாசிலா (மேலப்பாளையம்) மாமன்ற உறுப்பினர்கள் கந்தன், மன்சூர், மாரியப்பன், சுப்பிரமணியன்,ரம்சான் அலி, சுந்தர் , நித்தியபாலையா, முத்து சுப்பிரமணியன், ரவீந்தர், அல்லா பிச்சை, சகாய ஜூலியட் மேரி, சபி அமீர்பாத்,ராஜேஸ்வரி,மாநகர நல அலுவலர் அரசகுமார், சுகாதார அலுவலர் சாகுல் ஹமீது உள்பட பலர் கலந்து கொண்டனர்.